# <u>தேவகோட்டை நகராட்சி</u>

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் சாதாரணக்கூட்டம் தனிஅலுவலரால் **31.05.2021**ம் தேதி திங்கள்கிழமை காலை **11.00** மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## <u>பொருள்–34</u>

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் தமிழகத்தில் தற்போது மீண்டும் மிக வேகமாக பரவிடும் உயிர்க்கொல்லி நோயான கொரோனா வைரஸ் 2ம் அலை காய்ச்சல் தடுக்கும் பொருட்டு மத்திய மாநில அரசுகள் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இருப்பினும் கொரோனா வைரஸ் காய்ச்சல் பரவும் வீதம் அதிகளவில் இருப்பதாலும், நோய் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் உயிர் பலியும் அதிக அளவில் ஏற்படுகிறது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு நகராட்சி பகுதிகளில் முன்னேச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தேவையான கிருமிநாசினிகள் இருப்பில் வைக்க அறிவுறுத்தியதன்படி கீழ்காணும் கிருமிநாசினிகள் தேவைப்படுகிறது.

**<u>தேவையான பொருள்கள்:–</u>**

1) லைசால் – 6000 லிட்டர்.
2) கபசுர குடிநீர் பவுடர் – 150 கிலோ.

மேற்குறிப்பிட்ட பொருள்களை வாங்க உத்தேச செலவீனம் ரூ. 16 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ளும் செலவு மேற்கொள்ளவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி 24 மணி நேர உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : –

அ) பொது சுகாதார அவசர அவசியம் கருதி 24 மணிநேர உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குறைந்த விலைப்புள்ளி வழங்கும் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்படி பணியின் செலவீனத்தை SDRF நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 34</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 35</u>**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் தமிழகத்தில் தற்போது மீண்டும் அதிகளவில் பரவி வரும் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணியில் ஈடுபடும்

பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கும் கொரோனா வைரஸ் காய்ச்சலிருந்து பாதுகாத்துக்கொள்ள தேவையான உபகரணங்கள் மற்றும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டு பகுதிகளிலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு கொரோனா வைரஸ் தடுப்பு முன்னேச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தேவையான கிருமிநாசனிகள் இருப்பில் வைக்க அறிவுறுத்தியதின்படி கீழ்காணும் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமிநாசனிகள் தேவைப்படுகிறது.

**<u>தேவையான பொருட்கள்:–</u>**

1) 3 – PLY – மாஸ்க் – 20000 எண்ணம்
2) கையுறைகள் மறுபயன்பாடு – 2000 எண்ணம்
3) ஹைப்போ குளோரைடு – 2000 லிட்டர்
4) பினாயில் – 1000 லிட்டர்
5) சானிடைசர் – 100 லிட்டர்

மேற்குறிப்பிட்ட பொருள்களை வாங்க உத்தேச செலவீனம் ரூ.10.50 இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ளவும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி 24 மணிநேர விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : –

அ) பொது சுகாதார அவசர அவசியம் கருதி 24 மணிநேர விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குறைந்த விலைவிகிதம் வழங்கும் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்படி பணியின் செலவீனத்தை SDRF நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 35</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 36</u>**

தேவகோட்டை நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021–ம் ஆண்டு திட்டத்தின் கீழ் 3 சிப்பங்களாக சாலைப்பணிகள் மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தப்புள்ளிகளை செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்காணும் நிறுவனத்திடம் இருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:–

| நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|
| GRAPHICS ARTS INDUSTRIES | 4423/23.12.2020 | 68,040.00 |
| | மொத்தம் | 68,040.00 |

மேற்காணும் விளம்பர நிறுவனத்திற்கு தொகை ரூ.**68,040/–** வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்படி செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 36**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 37**

தேவகோட்டை நகராட்சியில் தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாடு திட்டம் (TNSUDP – 2020-21) ன் கீழ் 5 சிப்பங்களாக சாலைப்பணிகள் மேற்கொள்ள வேண்டி ஒப்பந்தப்புள்ளிகளை செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்காணும் நிறுவனத்திடம் இருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:–

| நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|
| GRAPHICS ARTS INDUSTRIES | **4517/29.01.2021** | **11,48,969/–** |
| | மொத்தம் | **11,48,969/–** |

மேற்காணும் விளம்பர நிறுவனத்திற்கு தொகை ரூ.**11,48,969/–** வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்படி செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 37**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:– 38**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது அதிக அளவில் பரவி வரும் கொரோணா வைரஸ் காய்ச்சலில் இருந்து பெதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியும், கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளையும் செய்து வரும் **45** டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுக்கும் மற்றும் தூய்மை இந்தியா பரப்புரையாளர்கள் (Animators) **8** நபர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்தவாறு பணியாளர்களின் பணியினை ஊக்குவிக்கும் வகையில் மே **2021** மற்றும் ஜுன் **2021** ஆகிய மாதங்களுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கவும் மேற்படி பணியாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.**1000/–** வீதம் **53** பணியாளர்களுக்கு வழங்க அதற்காகும் செலவீனம் (**53 x 2 x 1000 = 1,06,000/–**) ரூ.**1,06,000/–** த்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 38</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 39</u>**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உயிர்கொல்லி நோயான கொரோனா வைரஸ் காய்ச்சல் மிகவும் அதிகளவில் பரவி வருகின்றது. தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் – சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்:**9691/2021/J1**, நாள்: **11.05.2021**–ல் அறிவிறுத்தலின்படி பொதுமக்களை கொரோனா வைரஸ் காய்ச்சலில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு அனைத்து பகுதிகளிலும் மருத்துவ முகாம்கள் நடத்த தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வாங்கவும், வைரஸ் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் நடமாட்டத்தினை தடை செய்து தடுப்புகள் அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளவும் துப்பரவு ஆய்வரின் குறிப்பின்படி உத்தேச செலவீனம் ரூ.**3.00** இலடச்சத்திற்கு செலவீனம் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி உடன் விலைப்புள்ளி பெற்று மேல் நடவடிக்கை தொடரவும் மேற்படி செலவீனத்தை அவ்வப்போது செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொதுசுகாதார நலன் கருதி உடன் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் குறைவான விலை விகிதம் வழங்கிய நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்காணும் செலவீனத்தை SDRF–நிதி–**2021** கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 39</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 40</u>**

தேவகோட்டை நகராட்சியில் பொதுநிதி **2020–21**–ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட் கீழ்கண்ட பணிக்கு **11.02.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| **1** | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான காந்தி ரோட்டில் | **4.00** | **1)**திரு T.பாண்டி | **0.09** % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மராமத்து பணி செய்தல். | | 2)திரு.V.கணபதி | 2.36% அதிகம் |

அலுவலக குறிப்பு:–

அ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**<u>தீர்மான எண்: 40</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 41</u>**

இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் பட்டுபோன வேப்ப மரம் ஒன்று உள்ளது. சுமார் 55 வருட பழமை வாய்ந்த இந்த வேப்ப மரமானது கடந்த மூன்று வருடங்களுக்கு முன் தீடிரென பட்டுபோக ஆரம்பித்து சில மாதங்களில் முழுமையாக பட்டு போய்விட்டது. இதன் காரணமாக இந்த வேப்ப மரமானது எந்நேரமும் அருகில் உள்ள அலுவலக கட்டிடத்தில் சாய்ந்து விழும் நிலையில் உள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெட்டி அப்புறப்படுத்த வேண்டி வருவாய் கோட்டாட்சியர் தேவகோட்டை அவர்களுக்கு அனுமதிகோரி கடிதம் அனுப்பியதின் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் இருந்து மரத்தை வெட்டி அப்புறப்படுத்த அனுமதி அளித்து கடிதம் வரப்பெற்றுள்ளது. அக்கடிதத்தின் அடிப்படையில் மரத்தை வெட்டி அப்புறப்படுத்த ஏல அறிவிப்பு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 41</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 42</u>**

தேவகோட்டை நகராட்சியில் 15 வது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2020–21–ன் கீழ் தேவகோட்டை நகராட்சியில் சுகாதார பணி மற்றும் குடிநீர் பணிகளுக்கு ந.ம.தி எண்:944 நாள்:31.12.2020–ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அப்பணிகள் திடக்கழிவு மேலாண்மை பணியான BOV வாகனங்களை புதிதாக கொள்முதல் செய்து தரும்படி ஒப்பந்த பணியில் மாற்றம் செய்ய 12.05.2021 அன்று சுகாதார ஆய்வாளரின் குறிப்பு மற்றும் அதேநாளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் நடப்பு தேவைக்கேற்ப மாற்றம் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரிட ஆணையாளர் அறிவுறுத்தல்படியும் மாற்றம் செய்யப்பட்ட பணிக்கான சுகாதார பணிக்கு அதே மதிப்பீட்டிற்கு மனற் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) சுகாதார பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 42</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 43</u>**

தேவகோட்டை நகராட்சி பகுதியில் உள்ள சாலைகளை பல்வேறு திட்டத்தில் புதிதாக மேம்பாடு செய்து சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. அதனால் இச்சாலைகள் உயரமானதால் அருகில் உள்ள மழைநீர் வடிகால் சுவர்கள் குறைந்துள்ளது. அதனால் சாலையில் உள்ள மண்கள் வடிகாலுக்குள் வழிந்துவிடுகிறது. மழைநீர் செல்ல முடியாமல் ஆங்காங்கே தேங்கி நிற்கிறது. அதனால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு ஏற்படும் நிலை உள்ளது. எனவே வார்டு எண் 1 முதல் 14 வரை தெருக்களில் உள்ள வடிகால் சுவர்களை உயரப்படுத்த தயார் செய்த மதிப்பீட்டுத்தொகை ரூ.9.90 இலட்சம் ஆகும். இத்தொகையை குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 43</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 44</u>**

தேவகோட்டை நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகளை பொது நிதி மற்றும் பல்வேறு திட்டப்பணியில் புதிதாக சாலை பணிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகள் உயரமானதால் மழைநீர் வடிகால் சுவர்கள் உயரம் குறைவாக உள்ளது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் சாலையில் உள்ள மண் வடிகாலில் விழுந்து மழைநீர் வடிகால் செல்ல முடியாமல் உள்ளது. அதனால் கொசுக்கள் உற்பத்தி ஆகி சுகாதாரகேடு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு வார்டு எண் 15 முதல் 27 வரை உள்ள வடிகால் சுவர்களை உயர்த்தப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே இப்பணியை செய்து முடிக்க தயார் செய்த மதிப்பீட்டு தொகை ரூ9.50 இலட்சம் ஆகும். இப்பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மான எண்: 44</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 45</u>**

தேவகோட்டை நகராட்சியில் அலுவலக பணிக்காக இரண்டு ஈப்பு வாகனங்கள் உள்ளது. இவ்வாகனங்கள் நிறுத்த ஏதுவாக கொட்டகை (SHED) இல்லை. இதனால் இந்த இரண்டு வாகனங்களும் மழையிலும். வெயிலிலும் திறந்தவெளியிலேயே நிறுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதன் காரணமாக இந்த வாகனங்களின் பாகங்கள் துருப்பிடித்தும் பொலிவிழுந்தும் காணப்படுகின்றன. இதனை தவிர்க்கும் பொருட்டும் மேலும் இவ்வலுவலக பணியாளர்கள் தங்களது இரு சக்கர வாகனங்களை நிறுத்த ஏதுவாகவும் கொட்டகை அமைக்க வேண்டியது அவசியம்மாகிறது. இதற்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சம் ஆகும். இத்தொகையை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 45</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 46</u>**

தேவகோட்டை நகராட்சியில் நடைபெற்று வரும் புதிய குடிநீர் குழாய் வீட்டு இணைப்பு வழங்கும் திட்டப்பணியினால் சேதமடைந்துள்ள சாலைகள் மற்றும் மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளை தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2020–2021 ( TNSUDP) திட்டத்தின் கீழ் 20.020 கி.மீ நீள சாலைகளை ரூ.11.40 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்ய மானியம் , கடன் மற்றும் உள்ளாட்சி நிதி உதவியுடன் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பணி மேற்கொள்ள நிர்வாக இயக்குநர், TNUIFSL, சென்னை அவர்களின் கடிதம் எண்.TNUDF/Projects/Devakottai Roads, நாள்.10.02.2021–இல் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு,

1) **Amount of Loan** :Rs.2.81 Crores (Rupees Two Crores and eighty One Lakhs only)

1) **Projects** :Road Improvement sub-project in Devakottai Municipality.

2) **Project Cost** : Rs.11.40 Crores

3) **Rate of Interest** : 8.60% per annum

4) **Principle Moratorium** : 1 year

5) **Repayment Period** : 6 years

6) **Financing Plan** :

| **Sl.No** | **Means of Finance** | **Amount (Rs. in Crores)** |
|---|---|---|
| 1) | Loan from Tamilnadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP | 2.81 |
| 2) | Grant from Project Sustainability Grant Fund (PSFG) under World Bank assisted TNSUDP. | 6.47 |
| 3) | ULB Contribution. | 2.12 |
| **Total Project Cost** | | **11.40** |

7) **Completion Period:**
The proposed Project should be completed within one year from the date of commencement of project.

8) **Last date of withdrawal:**
Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the Loan shall cease on completion of three years from the date of execution of the Loan Agreement.

9) **Special terms & conditions:**

   a) **Procurement Guidelines:**

The ULB shall adhere to the provisions / guidelines of International Bank of Reconstruction and Development for procurement of works, goods and services. The ULB shall obtain approval for contract packaging, bid documents, bid evaluation reports and other reports & documents as applicable from TNUIFSL.

b) **ULB Contribution:**
The ULB shall contribute an amount of Rs.2.12 Crores (Rupees Two Crore and Twelve Lakhs only) as own contribution during the construction period.

c) **Operation & Maintenance:**
The ULB shall operate and maintain the Project assets in a good working condition and shall provide budgetary allocation every year for meeting the operation & maintenance charges from its general funds.

d) **Project Account :**
The ULB shall open separate project account for the sub-project assisted under TNSUDP in the book of accounts of the ULB.

e) **Loan from others:**
The ULB shall not avail any fresh loans from banks, institutions or any other agency during the tenure of TNUDF's Loan without obtaining prior written approval from TNUIFSL.

f) **Environment & Social Framework:**
The ULB shall implement the Project according to the Environmental and Social Management Framework (ESMF) prescribed by TNUIFSL.

g) The Municipal shall honour the debt service payment from there General fund on the respective due dates prescribed by TNUDF. If there ULB fails to honour the debt service on the respective due dates, the same shall be recovered from the state finance commission devolution Grant through the Commissioner of Municipal Administration.

மேற்கண்ட நிதி ஆதாரங்களின்படி கடன் பெற்றும், மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் தேவகோட்டை நகராட்சியில் நடைபெற்று வரும் புதிய குடிநீர் குழாய் வீட்டு இணைப்பு வழங்கும் திட்டப்பணியினால் சேதமடைந்துள்ள சாலைகள் மற்றும் மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளை தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2020–2021 ( TNSUDP) திட்டத்தின் கீழ் 20.020 கி.மீ நீள சாலைகளை இணைப்பில் கண்டுள்ள TNUIFSL நிறுவனத்தின் கடன் மற்றும் முத்தரப்பு உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு சம்மதம் தெரிவித்து ரூ.11.40 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>.** மன்றம் அனுமதி வழங்கலாம்

**<u>தீர்மான எண்: 46</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 47</u>**

தேவகோட்டை நகராட்சியில் நடைபெற்று வரும் புதிய குடிநீர் குழாய் வீட்டு இணைப்பு வழங்கும் திட்டப்பணியினால் சேதமடைந்துள்ள சாலைகள் மற்றும் மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளை தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2020–2021 ( TNSUDP) திட்டத்தின் கீழ் 20.020 கி.மீ நீள சாலைகளை ரூ.11.40 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்ய மானியம் , கடன் மற்றும் உள்ளாட்சி நிதி உதவியுடன் கீழ்க்கண்ட

நிபந்தனைக்குட்பட்டு பணி மேற்கொள்ள நிர்வாக இயக்குநர், TNUIFSL, சென்னை அவர்களின் கடிதம் எண்: TNUDF/Projects/Devakottai Roads, நாள்.10.02.2021–இல் மானிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு,

1. **Amount of Grant** **:** Rs.6.47 Crores (Rupees Six Crores and Forty Seven Lakhs Only)
2. **Projects** **:** Road Improvement sub-project in Devakottai Municipality.
3. **Project Cost** **:** Rs.11.40 Crores
4. **Financing Plan** **:**

| **Sl.No** | **Means of Finance** | **Amount (Rs. in Crores)** |
|---|---|---|
| 1) | Loan from Tamilnadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP | 2.81 |
| 2) | Grant from Project Sustainability Grant Fund (PSFG) under World Bank assisted TNSUDP. | 6.47 |
| 3) | ULB Contribution. | 2.12 |
| **Total Project Cost** | | **11.40** |

5. **Completion Period:**
The proposed Project should be completed within one year from the date of commencement of project.

6. **Last date of withdrawal:**
Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the grant shall cease on completion of three years from the date of acceptances of grant terms & conditions.

7. **Special terms & conditions:**

**a. Procurement Guidelines:**

The ULB shall adhere to the provisions / guidelines of International Bank of Reconstruction and Development for procurement of works, goods and services. The ULB shall obtain approval for contract packaging, bid documents, bid evaluation reports and other reports & documents as applicable from TNUIFSL.

**b. Statement of Expenditure & Progress report:**

The ULB shall provide monthly Progress reports and statement of Expenditure (SoE) during implementation in the format prescribed by TNUIFSL.

**c. Environment & Social Framework:**

The ULB shall implement the Project according to the Environmental and Social Management Framework (ESMF) prescribed by TNUIFSL.

மேற்கண்ட நிதி ஆதாரங்களின்படி கடன் பெற்றும், மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் தேவகோட்டை நகராட்சியில் நடைபெற்று வரும் புதிய குடிநீர் குழாய் வீட்டு இணைப்பு வழங்கும் திட்டப்பணியினால் சேதமடைந்துள்ள சாலைகள் மற்றும் மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளை தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2020–2021 ( TNSUDP) திட்டத்தின் கீழ் 20.020 கி.மீ நீள சாலைகளை இணைப்பில் கண்டுள்ள TNUIFSL நிறுவனத்தின் கடன் மற்றும் முத்தரப்பு உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு சம்மதம் தெரிவித்து ரூ.11.40 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**. மன்றம் அனுமதி வழங்கலாம்

**<u>தீர்மான எண்: 47</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 48</u>**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தலைவர்கள் சிலைகளை சமூக விரோதிகளிடமிருந்து பாதுகாத்திடவும், சிலை உடைப்பு, சிலை அவமதிப்பு போன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுக்கவும் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள சிலைகளை சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்திட ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. இவ்வுத்திரவிற்கிணங்கவும் தேவகோட்டை நகர் சார்பு காவல் ஆய்வாளர் அவர்களின் 21.04.2021–ந் தேதிய தொலைபேசி வழி விண்ணப்பத்தின்படியும் தேவகோட்டை நகரில் வார்டு எண்–18க்கு உட்பட்ட திண்ணப்ப செட்டியார் ஊரணி காந்திபூங்காவினுள் அமைக்கப்பட்டுள்ள காந்தி சிலையை சுற்றி இரும்பிலான கம்பி வலை பாதுகாப்பு வேலி அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.75,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி பணிக்கான செலவீனத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்: 3048</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:– 49</u>**

தேவகோட்டை நகராட்சி சிவகங்கை மாவட்டத்தில் முதல்நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி வளர்ந்து வரும் நகராட்சியாக உள்ளதால் இதன் பரப்பளவு 12.42 ச.கி உள்ளது. இந்நகராட்சி பகுதியில் 365 தெருக்கள் உள்ளது. இந்நகராட்சியில் பலவேறு திட்டப்பணிகள் மற்றும் பொதுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. வெளியில் சென்று வர நகராட்சி ஆணையருக்கு மட்டுமே ஒரு ஜீப் (வாகனம்) உள்ளது. நகராட்சி பொறியாளர் வெளியில் சென்றுவர வாகனம் (ஜீப்) இல்லாததால் பணிகள் நடைபெறும் இடங்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரைஅலுவலக கூட்டத்திற்கு உரிய நேரத்திற்கு சென்று வர இயலவில்லை. காலதாமதம் தவிற்கும் பொருட்டு ஒரு வாகனம் (ஜீப்) வாங்க வேண்டியது அவசியமாகிறது. எனவே அலுவலக பணிக்காக ஒரு ஜீப் வாங்கவும் பொது நிதியில்

பணி மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மனற் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**

1) பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 49**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ஒப்பம்)கே .மதுசூதனன்**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**